**செய்தி வெளியீடு எண்: 524** **நாள்:22.08.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள், ஆணழகன் போட்டிகளில் இந்தியாவின் சார்பாக கலந்து கொண்டு இந்தியாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்த திரு. பாஸ்கரன் அவர்களுக்கு இந்திய அரசின் ''அர்ஜுனா விருது'' அறிவிக்கப்பட்டதை பாராட்டி இன்று (22.8.2019) அனுப்பிய வாழ்த்துக் கடிதத்தின் விவரம் பின்வருமாறு:**

"2018–ஆம் ஆண்டு தாய்லாந்து நாட்டில் நடைபெற்ற 10–வது உலக ஆணழகன் போட்டியில் தங்கப்பதக்கமும், இந்தியாவில் நடைபெற்ற 52–வது ஆசிய ஆணழகன் போட்டியில் தங்கப்பதக்கமும் வென்று சாதனை படைத்துள்ளீர்கள். தங்களின் சாதனைகளை மேலும் ஊக்குவிக்கும் வண்ணம், இந்திய அரசு தங்களுக்கு **''அர்ஜுனா விருது''** அறிவித்து கௌரவித்துள்ளது என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

ஆணழகன் போட்டிகளில் இந்தியாவின் சார்பாக கலந்து கொண்டு, தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த தங்களுக்கு, என் சார்பாகவும், தமிழ்நாட்டு மக்கள் சார்பாகவும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

தாங்கள் இதுபோன்று பல்வேறு சர்வதேச போட்டிகளில் கலந்து கொண்டு, பல சாதனைகள் புரிந்து, இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்திட வேண்டும்; பல்வேறு விருதுகளைப் பெற வேண்டும் என மனமார வாழ்த்துகிறேன்.''

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**